Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 59 Of 2022**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.11**

Defence

Court

| | |
|---|---|
| Name | **சக்திவேல்** |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | **இந்து** |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 24th day of March 2026.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 24th day of March 2026.**

**( சாட்சியை அரசு தரப்பு வழக்கறிஞர் அடையாளம் காட்டினார்)**

**2 வது எதிரி இறந்து விட்ட காரணத்தினால் குற்றம் அற்றுபோய் விட்டது. 1 மற்றும் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.**

**முதல்விசாரணை**

நான் பண்ருட்டி திருவதிகை கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் திருவதிகையை சேர்ந்தவர்கள். இறந்த சாந்தகுமார் எனது சித்தப்பா மகன். அவர் கொலை செய்யப்பட்ட போது நான் சிறையில் இருந்தேன். தரணி என்பவர் முதலாவது எதிரி ஞானவேலின் அக்கா. தரணியை நான் காதலித்தேன். நாங்கள் இருவரும் ஒன்றாக பழகியதில் தரணி கர்ப்பமானர். தரணியை திருமணம் செய்து கொள்ள நான் அவகாசம் கேட்டேன். தரணி என் மீது வழக்கு கொடுத்தார் எனவே என்னை கைது செய்தார்கள். 45 நாட்கள் சிறையில் இருந்து வெளியே வந்தேன். நான் சிறையில் இருந்த போது சாந்தகுமாருக்கும் எதிரிகளுக்கும் இடையே பிரச்சினை என்று கேள்விப்பட்டேன். எதனால் அவர்களுக்குள் பிரச்சினை என்று எனக்கு தெரியவில்லை. சாந்தகுமார் இறந்து குறித்து என்னை யாரும் விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி ஆவணங்கள் பரிசிலிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை:**

தரணியை திருமணம் செய்வதற்கு தடையாக சாந்தகுமார் இருந்த காரணத்தினால் எதிரிகள் சாந்தகுமார் மீது கோபமாக இருந்ததாகவும் 02.09.2020 அன்று என்னை சிறையில் அடைத்து விட்டதாகவும் சிறையில் இருந்த போது

05.09.2020 அன்று சாந்தகுமாரை எதிரிகள் கொலை செய்து விட்டதாக என்னை பார்க்க வந்த உறவினர்கள் மூலம் தெரிந்துக்கொண்டதாகவும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது என் மீது வழக்கு நிலுவையில் உள்ளதாலும் எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

எதிரிகளுக்கும் சாந்தகுமாருக்கும் என்ன காரணத்தினால் பிரச்சினை என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கும் தரணிக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சினையில் சாந்தகுமார் தலையிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*

*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*